## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம் /புவியியற்துறை

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு/பொதுக் கலைமாணித் தேர்வு

## 2011/2012(Feb. 2014)

| | |
|---|---|
| CC 3102: சூழல் முகாமைத்துவம் (Environmental Management) | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- எவையேனும் நான்கு(04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

1)

a) சூழல் முகாமைத்துவம் என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

b) புவியின் உப தொகுதிகளுள் (Earth's sub-system) ஒன்றான நீர்க்கோளம் (Hydrosphere) தரமிழக்கக் காரணமான மானிட, இயற்கைக் காரணிகளை வகைப்படுத்துக.

(08 புள்ளிகள்)

c) பூகோளத்தில் சூழல் முகாமைத்துவத்தின் தேவையை வலியுறுத்துவததற்கு நீர் முன்வைக்கும் காரணங்களைத் தந்து, அவை பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

2)

a) சூல் தொகுதி ஒன்றின் நிலைபேற்றுக்கு அடிப்படையான செயன்முறைகள் எவை?

(05 புள்ளிகள்)

b) மேற் குறிப்பிட்ட செயன்முறைகளின் முக்கியத்துவம் குறித்துக் கருத்துரைக்குக.

(08 புள்ளிகள்)

c) “சூழல் தொகுதி ஒன்றில் உள்ளடங்கும் உயிர்க் கூறுகளை வகைப்படுத்தி, அவ்வ அச் சூழல் தொகுியில் ஆற்றும் பங்களிப்பு யாதென விளக்குக.

(12 புள்ளிகள்)

3)

a) காலநிலை மாற்றம் காரணமாக சூழல் தரமிழக்கப்படும் சந்தர்ப்பங்களை தகுந்த உதாரணங்களுடன் முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

b) “காலநிலை மாற்றத்தைத் தூண்டுவதில் மனித செயற்பாடுகளே பிரதானமானவை” இக் கூற்றின் ஐதார்த்தத்தை பொருத்தமான ஆதாரங்களை முன்வைத்து நியாயப்படுத்துக.

(15 புள்ளிகள்)

**4)** நவீனத்துவம் அடைந்து வரும் விவசாய நடவடிக்கைகளினால் ஏற்படும் சூழல் மீதான தாக்கங்களை விளக்கி, அவ்வாறான தாக்கங்களில் இருந்து சூழலைப் பாதுகாப்பதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகளைக் குறிப்பிடுக.

(25 புள்ளிகள்)

**5)** 'அபிவிருத்தி' 'நிலைபேண் அபிவிருத்தி' ஆகிய பதங்களுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்கி, நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான சிறந்த அணுகுமுறைகள் எவையெனக் குறிப்பிட்டு விளக்குக.

(25 புள்ளிகள்)

**6)** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி விளக்கக் குறிப்புரை தருக

a) இயற்கை இடர்களும் சூழல் பாதிப்புகளும்

b) ஓசோன் படையின் சிதைவு

c) காடழிப்பும் சூழல் தாக்கங்களும்

(12.5x2=25 புள்ளிகள்)